பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 04 | வியாழக்கிழமை | 21.09.2023 | அதிர்வு 51

## ஒடுக்கப்படுகின்றது நாட்டின் ஜனநாயகம்


### செல்வம் எம்.பி. ஆதங்கம்

– சுடர் திலீபன் –

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செல்லும் இடமெல்லாம் ஜனநாயகம் தொடர்பில் பேசிக்கொண்டு, நாட்டில் ஜனநாயகத்தை ஒடுக்கும் வகையில் சட்டங்களைக் 03▶

### ஈஸ்டர் தாக்குதல் விசாரணை:

## டிரான் அலஸுடன் எதிரணி மோதல்!



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

2019 உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய 03▶

### கொலைகள், கொள்ளைகள், ஊழல்கள், தாக்குதல்கள் தாண்டவம்

## எம்.பிக்கள், மக்களின் உயிர்கள் கேள்விக்குறி

### அவர்களை அரசு பாதுகாக்க வேண்டும் என சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



- சுடர் திலீபன் -

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிர்களையும், மக்களின் உயிர்களையும் அரசு பாதுகாக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார். 02▶

### சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில்

## நாளை வைத்தியசாலைகள் முன்பாக அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டம்



அரசுக்கு எதிராக நாளை வெள்ளிக்கிழமை மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்று சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களும், ஏனைய சில தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன.

"சுகாதார சேவைகள் ஆபத்தில்" என்ற தொனிப்பொருளின் கீழ் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் உறுப்பினர் வைத்தியர் ஜெயந்த பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய விரோத தினமாக 06▶

### கஜேந்திரன் மீதான தாக்குதலைக் கண்டிப்பதற்கு

## முதுகெலும்பு இல்லாத கிழக்கு ஆளுநர் கோழைத்தனமாக அறிக்கை விடுகிறார்



### சபையில் வேலுகுமார் விளாசல்

"அஹிம்சைவாதியான தியாகி திலீபனை நினைவுகூருவது சட்டவிரோதம் என்று கோழைத்தனமாக அறிக்கை விடுத்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர், அந்த அறிவிப்பை உடன் மீளப்பெற வேண்டும்."

– இவ்வாறு வலியுறுத்தினார் ஐக்கிய மக்கள் சக்தியின் தமிழ் முற்போக்குக் 02▶

### இரகசியம்



வாக்குச் சுருட்டலுக்காக திருகோணமலையில் 'சூடு கிளிப்பும்' வேலையைச் சைக்கிள்காரர்கள் இப்போது செய்திருந்தாலும், திருகோணமலைக்கு அது புதிதல்ல, 'உதய சூரியன்' ஒரு காலத்தில் செய்த தந்திரோபாயம்தான் அது, 18 வயது இளைஞனாக 03▶



# வவுனியாவில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

**(வவுனியா நிருபர்)**

**வவுனியா, சின்ன விளாத்திக்குளம் குளத்தின் இயற்கையான அணைக்கட்டை உடைத்து கல் அகழ்வுப் பணி இடம்பெறுவதற்கு எதிராக கதிரவேலர் பூவரசன்குளம் கமக்காரர் அமைப்பின் விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையத்துக்கு முன்பாக அலுவலகத்தின் வாயிலைப் பூட்டி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.





வவுனியா, சின்ன விளாத்திக்குளம் குளக்கட்டு இயற்கையாக கற்பாறைகளை கொண்டமைந்த நிலையில் 12 அடி நீரை சேமிக்க கூடிய சிறு நீர்ப்பாசன குளமாக காணப்படுகின்றது. இந்நிலையில் குறித்த குளப்பகுதியில் கடந்த 5 மாதங்களுக்கு முன் கல்குவாரி அமைக்கப்பட்டு கல் அகழ்வு இடம்பெற்று வந்த நிலையில் விவசாயிகள் குளத்தின் பாதுகாப்பு மற்றும் விவசாய செய்கைக்கு பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்து வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா பிரதேச செயலாளர், ஓமந்தை பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்த நிலையில் கல் அகழும் பணி நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 15 நாட்களாக மீண்டும் குறித்த பகுதியில் மீண்டும் கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் குளத்தின் அணைப்பகுதி சேமாகியுள்ளதாகவும் அதனை சீர்செய்ய முடியாது போயுள்ளதுடன் நீரைச் சேமிக்க முடியாது போகும் எனவும், 200 ஏக்கர் விவசாய நிலத்தினை விவசாயம் செய்யாது கைவிட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், கல்குவாரி அமைத்துள்ளவர்கள் மேலிடத்தில் இருந்து அனுமதியைப் பெற்று வருவதால் தாம் எதுவும் செய்ய முடியாதுள்ளதாக வவுனியா அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் எனவும், இதனால் தமது விவசாயம் பாதிக்கப்படுகின்றது எனவும் தெரிவித்து குறித்த கமக்காரர் அமைப்புக்குக் கீழ்ப்பட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்தப் பகுதிக்கு வருகை தந்த ஓமந்தை பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு தெரிவித்த நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

பொலிஸார் குறித்த கல் அகழ்வுப் பணியை இடைநிறுத்துவதாகத் தெரிவித்ததுடன் அந்தப் பகுதியையும் சென்று பார்வையிட்டனர். இதன் பின்னர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்த கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளுடன் கலந்துரையாடி குளத்தின் அணைப் பகுதியைச் செப்பனிட்டு தருவதாக உறுதிமொழி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

## எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் சட்டம் – ஒழுங்கு ஆபத்துக்குள்ளாகி இருக்கின்றது. நாடு முழுவதும் கொலைகள், கொள்ளைகள், ஊழல்கள், தாக்குதல்கள் போன்றவை தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன. இதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கை பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும்.

இதுபோன்ற அநாகரிக செயல்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் போலவே 220 இலட்சம் மக்களின் உயிர்களையும் அரசு பாதுகாக்க வேண்டும்." – என்றார்.

## முதுகெலும்பு இல்லாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணி) கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் கூறியதாவது:–

"அஹிம்சை வழியில் போராடி உயிர்த் தியாகம் செய்த திலீபனை நினைவுகூர்ந்து வாகனப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கேற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது திருகோணமலையில் வைத்து மிலேச்சத்தனமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதைத் தடுக்காமல் பொலிஸார் செயற்படும் விதத்தையும் வீடியோக்களில் காணக் கூடியதாக இருந்தது.

இந்நிலையில் அரசின் பிரதிநிதியாக இருக்கக்கூடிய கிழக்கு மாகாண ஆளுநர், செல்வராசா கஜேந்திரன் எம்.பியின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது எனக் கோழைத்தனமாக அறிக்கை விட்டுள்ளார். ஓர் அஹிம்சைவாதியை நினைவுகூர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், வழிமறிக்கப்பட்டு மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குக் கண்டனம் தெரிவிக்க அவருக்கு முதுகெலும்பில்லை. மாறாக நினைவேந்தலைச் சட்டவிரோதம் எனக் கூறி கோழைத்தனமாக அவர் அறிக்கை விடுத்துள்ளார். கிழக்கு ஆளுநரின் செயலைக் கண்டிக்கின்றோம். அந்தக் கூற்றை அவர் உடன் மீளப்பெற வேண்டும்." – என்றார்.

## ஒடுக்கப்படுகின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கொண்டு வருவது எந்த வகையில் நியாயமானதாக அமையும்.?"

– இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற காடு பேணல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. வர்த்தமானியில் பார்க்கும் போது இரண்டும் ஒன்றாகவே தெரிகின்றது. சுதந்திரமாக ஜனநாயக ரீதியில் போராடுவதை நிறுத்துவதற்கான செயற்பாடாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. இதனை தமிழ், சிங்கள மக்கள் எதிர்க்கின்றனர். மீண்டும் அடக்குமுறைகளை கொண்டு வரும் சட்டமாகவே இது அமையும். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

பொருளாதார ரீதியில் பிரச்சினைகளுக்குள் இருக்கும் நேரத்தில் ஜனநாயக மரபுகளை ஒழிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. இவ்வாறான நிலைமை இங்கே இருக்கக் கூடாது என்பதே எங்களின் எண்ணமாக உள்ளது.

ஜனாதிபதி செல்லும் இடமெல்லாம் ஜனநாயகம் தொடர்பாகப் பேசிக்கொண்டு இவ்வாறு ஜனநாயகத்தை அடக்கும் நடவடிக்கைகள் எந்த வகையில் நியாயமானதாக இருக்கும்.? பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு ஐ.நா. கூறுகின்றது. ஆனால், அரசோ அதனை நீக்கி அதற்கு இணையான சட்டத்தைக் கொண்டு வருவதாகக் கூறுகின்றது.

யுத்தம் இல்லாத தற்போதைய நிலைமையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசியமானது அல்ல. இதனால் இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

திருகோணமலையில் எங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். அவர் ஜனநாயகப் போராட்டத்திலேயே ஈடுபட்டார். திலீபனும் ஜனநாயக ரீதியில் உண்ணாவிரதம் இருந்தே மரணித்தார். இவ்வாறான நிலைமையில் குறித்த தாக்குதல் சம்பவங்கள் இன முறுகல்களை ஏற்படுத்தும். ஜனநாயக ரீதியிலான விடயங்களுக்கு இடமளிக்க வேண்டும்." – என்றார்.

## டிலான் அலஸ்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கத் தவறியதைத் தொடர்ந்தே இந்த வாக்குவாதம் இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு குற்றம் சாட்டியவர்கள் தொடர்பில் ஒரு வருடத்திற்கு முன்னர் எழுப்பப்பட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி குற்றம் சாட்டினார்.

"ஜனாதிபதி ஆணைக்குழு, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன குறித்து தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. அவருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனவும் பரிந்துரைத்திருந்தது" – என்று ஹெக்டர் அப்புஹாமி எம்.பி. தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் நிலந்த ஜயவர்தனவின் பெயரைக் குறிப்பிடவில்லை என்று தெரிவித்தார்.

"நிலந்த ஜயவர்தனவை விசாரணை செய்தால் அவருடன் சேர்ந்த பலர் சிக்குவார்கள். அதனால்தான் அரசு, நிலந்த ஜயவர்தனவை விசாரணைக்கு உட்படுத்த அஞ்சுகின்றது" – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நான் அதனைப் பார்த்திருந்தேன், சம்பந்தனின் முதல் தேர்தல் வெற்றிக்காக அது கட்டவிழந்தது – என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று விடிகாலையிலேயே அதை வாசித்த – எனக்கு அடுத்த தலைமுறையைச் சேர்ந்த – இளம் வாசகர் ஒருவரிடமிருந்து அழைப்பு வந்தது.

"சங்கரியும் அப்படிக் குழப்பம் பண்ணி இருக்கின்றாரா?" – என்று வியப்போடு கேட்டார் அவர்.

எனக்கு விளங்கவில்லை. என்னவென்று விசாரித்தேன்.

"அதுதான் 'உதயசூரியன்' என்று எழுதியிருக்கின்றீர்களே. அப்படி என்றால் சங்கரியின் கட்சிதானே...!" என்றார் பழைய விடயங்களைப் புரியாத இந்தத் தலைமுறையின் அந்த நண்பர். நான் சிரித்தேன். விளங்கப்படுத்தினேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி 1977 பொது தேர்தலில் ஏறத்தாழ தமிழர்களின் ஏகப்பிரதிநிதிக் கட்சியாக விஸ்வரூபம் எடுத்ததிலிருந்து,அந்தச் சின்னத்தை மிலேனியத்துக்குப் பின்னர் நீதிமன்றம் மூலம் சுருட்டி கொண்டு போய் சங்கரி போட்டடித்திருக்கின்றமை வரைச் சுருக்கமாகச் சொன்னேன்.

மிலேனியம் வரை சுமார் கால் நூற்றாண்டு காலம் தமிழர் தேசமெங்கும் உதயசூரியன் கோலோச்சியது. அதன் ஆரம்பக் கட்டத்தில்தான் இது நடந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகி, தனித் தமிழீழம் கோருவதற்கான வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அடுத்த ஆண்டில், 1977 ஏப்ரல் 26 இல், தந்தை செல்வா காலமானார். அப்போதிருந்த தேசிய அரசு பேரவை என்ற நாடாளுமன்றம் 1977 மே 18ஆம் திகதி கலைக்கப்பட்டது. ஜூன் 6ஆம் திகதி வேட்புமனு ஏற்றல். ஜூலை 21ஆம் திகதி பொது தேர்தல்.

இந்தச் சமயத்தில்தான் திருகோணமலை சிவன் கோயில் அருகே ஸ்தாபிக்கப்படுகின்ற தந்தை செல்வா நினைவு இடத்தில் வைக்கப்படுவதற்காக தந்தையின் அஸ்தியின் ஒரு பகுதி திருகோணமலைக்கு எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜூன் 6ஆம் திகதி வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட இருக்கையில், ஜூன் மூன்றாம் திகதி சீனக்குடா விமான நிலையத்துக்கு அஸ்தி விமானத்தில் வந்து சேர்ந்தது. அடுத்த நாள் ஜூன் 4 ஆம் திகதி மக்களின் தரிசனத்திற்கும் அஞ்சலிக்குமாக அது திருகோணமலை முற்றவெளி மைதானத்திற்கு ஊர்வலமாக எடுத்து வர ஏற்பாடாகியதாக எனக்கு நினைவு.

சீனக்குடவிலிருந்து திருகோணமலை, அநுராதபுரம் சந்தியை வந்தடைந்தது அஸ்தி ஊர்தி. அங்கிருந்து லிங்கநகர், உவர்மலை, சிவபுரி என்று நேரடியாக தமிழர் வாழும் பிரதேசங்கள் ஊடாக அதை சிவன் கோவில் வரை எடுத்து வரப் பாதை இருந்தது. அதுவே கிட்டிய வழியும் கூட. ஆனால், அதைத் தவிர்த்து, சிங்களவர்கள் வாழும் – சுற்றிவரும் பாதையை – தேர்ந்தது உதயசூரியன் அணி. அபேபுர, மஹிந்தபுர, ஸ்ரீமாபுர என்று சிங்களவர்கள் செறிந்து வாழும் பகுதிகள் ஊடாக – சிங்களவர்களைச் சீண்டி விடும் ஆரவாரங்களோடு – அஸ்தி ஊர்தி எடுத்து வரப்பட்டது. ஊர்தி பாதுகாப்பாகத் திருகோணமலை நகர மையத்தை வந்தடைந்ததாயினும் அதன் பின்னர் கலவரங்கள் வெடித்தன.

இப்போது 46 ஆண்டுகளாகிவிட்டன. அச்சமயம் எனக்கு வயது 18. இன்று என் நினைவும் ஞாபகமும் மங்கி இருக்கும். எனினும் முதல் நாள் இரவு – அநேகமாக மூன்றாம் திகதி இரவு – முதல் வெடி கொளுத்திப் போட்டவர்கள் நம்மவர்கள் என்று ஒரு நினைவு. ஒரு சிங்களவர் உயிரிழக்க, 4 அல்லது 5 சிங்களவர்கள் காயம் அடைந்தனர் என்பதும் ஞாபகம்.

அந்த ஊர்தியோடு சேர்ந்து பவனி வந்த நமது சைக்கிள் பேர்வழிகள் (சைக்கிள் கட்சிப் பேர்வழிகள் அல்லர் ஊர்வலத்தில் ஊர்திக்குப் பக்கமாக சைக்கிளில் வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள்) ஊர்தி சமயம் வீதியோர்த்தில் நின்ற சிங்களவர்களோடு சொறிந்து, முதல் வெடியைக் கொளுத்திப் போட்டார்கள் என்று பேசப்பட்டது.

அடுத்த நாள் ஜூன் 4 ஆம் திகதி இரவு சிறிமாபுரத்தை ஒட்டிக் கலவரம் வெடித்துக் கட்டவிழ்ந்தது. இரண்டு நாள்கள் கழித்து 1977 ஜூன் 6 ஆம் திகதி திருகோணமலை நாடாளுமன்றத் தொகுதிக்கான தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக முதல் தடவையாக சம்பந்தன் வேட்புமனுத் தாக்கல் செய்தபோது, கலவரம் ஊட்டிய உணர்வெழுச்சி, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு முழுத் தமிழ் வாக்குகளையும் அள்ளிச் சுருட்டும் அல்லது சொரியும் காமதேனுவாக மாறி இருந்தது. சம்பந்தனின் முதல் வெற்றி ஐயத்துக்கிடமின்றி உறுதியானது.

அன்று தந்தை செல்வா அஸ்தி ஊர்தி. இன்று தியாகி திலீபனின் நினைவு ஊர்தி. அவ்வளவுதான் வித்தியாசம். இரண்டுமே புனிதர்களின் பெயரால் அரங்கேறிய அவலங்கள்.

அன்று சிங்களவர் செறிந்து வாழும் பகுதியூடாக – நாக்கைத் தலையைச் சுற்றி மூக்கை தொடுவது போல – அஸ்தி ஊர்தியை வழி நடத்திய மாதிரி, இப்போது மூதூரில் இருந்து ஆலங்கேணி, தம்பலகாமம், நாலாம் கட்டை ஊடாகத் திருகோணமலையைச் சென்றடைய கூடிய பாதையைத் தவிர்த்து, சிங்களவர் செறிந்த பிரதேசத்தின் ஊடாக ஊர்தியைப் பயணிக்க வைத்த விடயம் சந்தேகத்தை ஏற்படுத்தி நிற்கிறது. இனவாதக் குழப்பங்களைத் தூண்டி வாக்குச் சுருட்டுவதுதான் தென்னிலங்கையிலும், வடக்கு, கிழக்கிலும் பரவணிப் பழக்கம் போலும். இது மாறாத தலையெழுத்துதான்.

# உலகளாவிய முன்னேற்றம் திருப்திகரமானதாக இல்லை

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான மாநாட்டில் ஜனாதிபதி உரை




**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான உலகளாவிய முன்னேற்றத்தின் தற்போதைய நிலை திருப்திகரமானதாக இல்லை என்றும், 12 சதவீத முன்னேற்றத்தை மாத்திரமே தற்போது காண முடிவதாகவும், ஏனைய முக்கிய மானஇலக்குகளில்30சதவீதத்தைஇன்னும்அடைந்து கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.**

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தொடருக்கு இணையாக நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலைபேறான அபிவி ருத்தி இலக்குகள் தொடர்பான 2023 கூட்டத்தொடரில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளால் 2015 இல் நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு களை உள்ளடக்கிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலின் பின்புலம் தொடர்பில் இதன்போது தனது கவனத்தைச் செலுத் திய ஜனாதிபதி, அதே ஆண்டில், கோப் 21 அமைப்பின் 196 நாடுகளால் நிறை வேற்றப்பட்ட பெரிஸ் ஒப்பந்தம், முற்போக் கான உலகளாவிய முயற்சியாகும் எனவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"நிலைபேறான அபிவிருத்தி இலக்கு களை அடைந்துகொள்ள நாம் அர்ப் பணிப்புடன் செயற்பட்டாலும் பாரிய அள விலான வளப்பற்றாக்குறை அதற்குத் தடையாக அமைந்துள்ளது.

மேலும், 2020 இல் ஏற்பட்ட கொவிட் நோய்த்தொற்று எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதைத் தாமதப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்ததுடன், பல்வேறு துறைக ளின் பொருளாதார நடவடிக்கைகள் முழு மையாகமுடங்கிப்போயின.இதுஏற்கனவே நிலவும் உலகளாவிய கடன் நெருக்கடியை அதிகப்படுத்தியது. இந்தச் சவாலான நிலை, இலங்கை உட்பட மேலும் பல்வேறு நாடுகளை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது. இந்த சூழ்நிலையில், மட்டுப் படுத்தப்பட்ட வளங்களுடன் அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடியதாக இருக்கிறதா என்பது இப்போது எழுந் துள்ள கேள்வியாகும்.

இலங்கை தொடர்பில் கூறுவதாயின், 2019 ஆம் ஆண்டின் முழுமையான மதிப்பீட்டுக்கமைய, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 9 சதவீத முதலீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொவிட் தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியும் இந்த இலக்கை அடைவ தற்கு பெரும் தடையாக காணப்பட் டது.

இலங்கையின் காலநிலை சுபீட்சத் திட்டத்துக்கு மாத்திரம் 2030 ஆம் ஆண்டாகும்போது 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான முதலீடுகள் தேவைப்படும். அதனை நிறைவு செய்து கொள்வதும் பாரிய சவாலாகும்.

இக்கட்டான பொருளாதார நெருக்கடி நிலைமை இலங்கைக்கு மாத்திரமின்றி ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் பல நாடுகளை பாதித்துள்ளதுடன், வங்கு ரோத்து நிலையிலிருந்து மீளக்கூடிய நிலையிலிருந்த நாடுகள் கூட தற்போ தைய நெருக்கடியின் விளைவுகளுடன் போராடுகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு தேசிய அளவில் நிர்ணயிக் கப்பட்ட பங்களிப்புகளை நிறைவேற்ற 2030 ஆம் ஆண்டுக்குள் 5.9 டிரில்லி யன் நிதியுதவி தேவை என்பதை ஜி 20 உச்சிமாநாடு மீண்டும் உறுதிப்படுத்தியது.

மேலும், 2050 ஆண்டுக்குள் நிகர – பூஜ்ஜிய உமிழ்வை அடைய புதுப்பிக் கத்தக்க வலுசக்தி தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 4 டிரில்லியன் வருடாந்த முதலீடு அவசியம்.

பல்வேறு நாடுகளைப் பாதிக்கும் முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி நிலையில், இந்த புள்ளிவிவரங்கள் சாத்தியமா என்பதை விமர்சன ரீதியாக ஆராய வேண்டும்.

புதிய உலகளாவிய நிதிச் சட்டத்துக் கான பெரிஸ் உச்சி மாநாடு நிதி சவால் களை எதிர்கொள்வதற்கான உறுதிப் பாடாக அமையும் என நம்புகின் றேன்.

எவ்வாறாயினும், உலகளாவிய நிதி மயமாக்கல் இந்த சிக்கலான மற்றும் அச்சுறுத்தலான நிலைமையை வெற்றி கொள்ள தீர்மானமிக்க நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டும்."
– என்றார்.

# யாழ்.பல்கலையில் நேற்று 'மீண்டெழும் பார்த்தீபம்'

'மீண்டெழும் பார்த்தீபம்' புதன் கால மாணவர் அரங்கு நேற்றையதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக கைலாசபதி அரங் கில் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற் றது.

இதன்போது 'திலீபனின் கோரிக் கைகளும் யதார்த்தமும்' எனும் தலைப் பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீட அரசறிவியல் துறை தலைவர் பேரா சிரியர் கே.ரீ.கணேசலிங்கத்தின் உரை யும், 'நினைவெழுச்சி – மாற்றத்திற்கான திறவுகோல்' எனும் தலைப்பில் கலைப் பீட நுண்கலைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனின் உரையும் இடம்பெற்றன.

# பிள்ளையானின் கொலைப்பட்டியலை மிக விரைவில் வெளியிட்டே தீருவேன்

## ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் அறிவிப்பு



(கனகராசா சரவணன்)

பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் கொலைப்பட்டியல் ஒன்றை ஆதாரங்களுடன் மிக விரைவில் வெளியிடுவேன் என ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் இரா.பிரபா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈஸ்டர் தாக்குதல் என்பது தமது கதிரைகளைத் தக்கவைப் பதற்காக அப்பாவி மக்களை இலக்குவைத்த தாக்குதல் என்பது சர்வதேசம் மட்டுமல்ல இலங்கையில் உள்ள சாதாரண மக்களுக்கும் தெரியும்.

பிள்ளையான் சிறையில் இருக்கும்போது சஹ்ரானின் சகோதரனைச் சந்தித்தாகவும் அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். என்று தனக்கு அன்று தெரியும் என்று கூறியுள்ளார்.

அன்று அவருக்கு அவ்வாறு தெரிந்திருந்தால் ஏன் அவர் அதனை உரிய பாதுகாப்புத் தரப்பின் கவனத்துக்குக் கொண்டு செல்லவில்லை.

எனது அம்மாவின் தங்கையின் மகன் கோவிந்தராஜன் என்பரைக் கடத்திச் சென்று படுகொலை செய்ததிலிருந்து மாநகர சபை உறுப்பினராக நான் கடமையாற்றியபோது எனது பத்திரிகையாளராக இருந்தவரைக் கடத்திச் சென்று கொலை செய்தமை வரையான பல கொலைகள் அடங்கிய பட்டிலை ஆதாரத்துடன் மிக விரைவில் வெளியிடுவேன்.

இன்று பிள்ளையான் தப்புவதற்காகக் கொஞ்சம் மக்களை ஏற்றிவந்து தனது காரியாலயத்துக்குள் வைத்துக்கொண்டு அவர்களை ஆர்ப்பாட்டம் செய்ய வைக்கின்றார்.

பிள்ளையான் நல்லவர், குற்றமற்றவர் என்றால் வடக்கு, கிழக்கில் உள்ள பொது வீதியில் இறங்கிச் செல்ல வேண்டும்."
– என்றார்.



# நேபாள பிரதமருடன் ரணில் சந்திப்பு

## இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்தக் கவனம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹாலுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருக்கு இணையாக நேற்று நியூயோர்க் நகரில் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால அரசியல், பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் மேம்படுத் துவது குறித்து இதன்போது இரு நாட்டுத் தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள இலங்கை – நேபாள கூட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வு, அதற்கான மிக முக்கியமான நடவடிக்கையாக அமையும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் எதிர்காலத்தில் வலுவாக முன்னேறும் என நம்பிக்கை தெரிவித்த நேபாள பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நேபாள மக்களுக்கு இடையில் சமய மற்றும் கலாசார ரீதியில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படு வதாகவும், இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை விரிவுப டுத்துவதற்கு இது ஒரு சிறந்த காரணியாக அமையும் என்பதை இரு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம், தனிமனிதர்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது மற்றும் சுற்றுலாத் துறையில் உறவுகளை மேம்படுத்து குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், பலதரப்பு விடயங்களில் இரு நாடுக ளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத் துவது குறித்தும் தலைவர்கள் கலந்துரையாடினர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூ யோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங் கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் உட்பட இலங்கை மற்றும் நேபாளத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கடும் போக்குத் தவிர்க்க முடியாதது

இலங்கையின் கல்வித்துறையை - ஏன் ஒட்டுமொத்த சமுதாயத்தையே - காட்டுமிராண்டிக் கூட்டமாக எண்ண வைக்கும் ஒரு சீரழிவுச் செயற்பாடுதான் பல்கலைக் கழகங்களில் தடுக்க முடியாமல் தொடரும் பகிடிவதை.

சிரேஷ்ட மாணவர்கள் என்ற திமிரில் - அல்லது சமூகப் பழக்கவழக்கங்களுக்கு மாறான மனநோயினால் - குழு ரீதியாக முன்னெடுக்கப்படும் ஒருவகை பயங்கரவாதச் செயற்பாடுதான் இந்தப் பகிடிவதை. ஒருவகை மனவெறிக்கு உட்பட்ட மாபியா கும்பல்களாக மாறும் மாணவர் கூட்டம், தங்களின் கீழ்த்தரமான குரூர வக்கிரங்களைத் தீர்க்கும் குற்றவியல் போக்குக்கு கவசம் வழங்கும் ஒரு தந்திரமே பகிடிவதை என்ற முலாம்.

கொடூரமான பகிடிவதைச் சம்பவங்கள் பல உயிர்களைக் குடித்து இருக்கின்றன. வரப்பிரகாஷ் என்ற மாணவனைக் கொன்ற பகிடிவதைக் கொடூரவாதிகள் இன்று நாட்டை விட்டுத் தப்பி ஓடி, வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து, சுதந்திரமாக அஞ்ஞாதவாசம் செய்கின்றனர். சுமார் இரண்டாயிரம் புதுமுக மாணவர்கள் பகிடிவதைக்கு அஞ்சியும் அதன் விளைவாகவும் தமது பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிடும் கொடூர நிலைமை நமது நாட்டில் தொடர்கின்றது.

உடலியல் ரீதியாக - உளவியல் ரீதியாக - பாலியல் ரீதியாக - இந்தக் காட்டுமிராண்டித்தனம், குரூரப் பண்பியல்பு பல்கலைக்கழக சமூகத்தில் கட்டவிழ்கின்றது.

பகிடிவதை விடயத்தில் யாருக்காக சமூகம் இரக்கம் காட்டுகின்றதோ, யாருக்காக அனுதாபப்படுகின்றதோ, யாரைப் பாதுகாப்பதற்காகப் பல்கலைக்கழகமும் சமூகமும் போராடுகின்றனவோ அந்த முதல் வருட மாணவர்கள்தான், சிரேஷ்ட மாணவர்கள் என்ற தகுதியைப் பெற்றதும் அடுத்த மூன்று வருடங்களாக எந்தத் தடைகளுமின்றி இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை தொடர்கின்றார்கள். இதுதான் இந்த மனநோய்க்குள் சிக்குண்டிருக்கும் சமூகத்தின் விநோதப் போக்காகும்.

பகிடிவதையில் ஒன்று கலந்திருப்பது காட்டுவாசிகளின் குரூரத்தனம். காட்டுமிராண்டிப் பண்பியல்பு. மிருகத்தன வெறிப்போக்கு.

இந்தப் பகிடிவதையை ஒழிப்பது தொடர்பாக எட்டு மாத கால நீண்ட ஆலோசனைகள், கலந்துரையாடல்களுக்குப் பிறகு ‘தேசிய ராகிங் எதிர்ப்புக் குழு’ அமைப்பது உட்பட நடவடிக்கை திட்ட யோசனை ஒன்று - அணுகுமுறை உத்தி ஒன்று - உருவாக்கப்பட்டிருப்பதாக உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் சுரேன் இராகவன் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சமாஜத்தின் பிரதிநிதியான கலாநிதி சாருதத்தே இலங்க சிங்க பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை ஒரு தனிப் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது, இது பல்கலைக் கழகத்திற்கு உள்ளேயே தீர்க்கப்பட வேண்டும் என்றெல்லாம் விதண்டாவாதம் செய்கிறார்.

ஒட்டுமொத்த சமுதாயத்தையே - கல்வி சமூகத்தையே - சீர்குலைக்கும் பகிடிவதை மாபியாவை ‘தலையைக் கிள்ளி எறியும்’ கடும் கோட்பாட்டு அணுகுமுறை மூலமே தீர்க்க முடியும். மாபியாவை அழிக்க மாபியா பாணியே வழிமுறை. முள்ளை முள்ளால் எடுப்பது போன்றது. அது தவிர்க்க முடியாத கட்டாயம்.

## திலீபனின் நினைவேந்தல் ஊர்திக்கு எதிராக மன்னாரில் சுவரொட்டிகள்




தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி வடக்கு கிழக்கில் மக்களின் நினைவேந்தலுக்கு சென்று வரும் நிலையில் அந்த நினைவேந்தல் பவனிக்கு எதிராக மன்னாரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் அதிகாலை மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களில் பரவலாக இந்த சுவரொட்டிகள் ‘தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம்’ என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த சுவரொட்டியில் –

“தமிழ் ஈழத்திற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர் தியாகம் செய்த மாவீரன் திலீபனின் தியாகத்தை விற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை துரத்துவோம்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்தச் சுவரொட்டிகளை மன்னார் மாவட்டத்தில் இராணுவப் புலனாய்வாளர்களே ஒட்டியுள்ளனர் என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## நாளை வைத்தியசாலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செப்டெம்பர் 22ஆம் திகதியை நாம் பிரகடனப்படுத்துவதுடன், அனைத்து வைத்தியசாலைகள் முன்பாகவும் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித்துக்கு இது தொடர்பில் விளக்கமளித்துள்ளோம். நாட்டின் சுகாதாரத்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் தான் நன்கு அறிந்துள்ளதாக அவர் கூறியதுடன், எமது போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் கூறினார்.

நாட்டு மக்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் பாதுகாக்கும் நோக்கில் போராட்டங்களை நடத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளன என நாட்டு மக்களுக்குத் தெரியும். அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக சுகாதாரக் கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக் கூறினோம். ஆனால், மக்களின் சுகாதாரம் தொடர்பில் அவர்களுக்குத் துளியளவும் அக்கறையில்லை.

அரசியல்வாதிகளுக்கு இந்த வைத்தியசாலை கட்டமைப்பு அவசியமில்லாவிடினும் நாட்டு மக்களுக்கும் இது அவசியமாகும். ஆகவே, நாளை 22ஆம் திகதி அரசுக்கு மீண்டுமொருமுறை தெளிவாக இந்த விடயத்தை உணர்த்தவுள்ளோம்.” – என்றார்.

இலங்கை தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.டி.மெதிவத்த கருத்து வெளியிடுகையில்,

“நாட்டு மக்கள், விவசாய, கல்விசார், சுகாதாரத்துறை மற்றும் நாட்டின் பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்களின் ஆதரவு இந்தப் போராட்டத்துக்கு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்க அனைவரும் அரசின் மோசமான செயற்பாடுகளுக்கு எதிராக அணிதிரள வேண்டும்.” – என்றார்.

## ஆர்ப்பாட்டத்தின்போது செய்தி அறிக்கையிட்ட

# ஊடகவியலாளரை அச்சுறுத்தி தாக்க முயன்ற ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

**(வவுனியா நிருபர்)**

**வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, செய்தி அறிக்கையிடலின்போது ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறை விளைவித்து அச்சுறுத்தலை விடுத்து தாக்க முயன்ற சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.**





வவுனியா, ஓமந்தை, சின்ன விளாத்திக்குளம் பகுதியில் உள்ள குளத்தின் அருகில் கல் குவாரி அமைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள் ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, அந்தப் பகுதியில் ஊடகவியலாளர்கள் செய்தி அறிகையிடலில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செயற்பட்ட போது அதனை ஊடகவியலாளர் ஒருவர் வீடியோ பதிவு செய்துள்ளார்.

இதையடுத்து அந்த ஊடகவியலாளரின் வீடியோ பதிவு செய்த தொலைபேசியைத் தட்டிய ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குறித்த ஊடகவியலாளரை அச்சுறுத்தி தாக்கவும் முயன்றுள்ளார். இதன்போது அங்கு நின்ற ஏனைய ஊடகவியலாளர்களும், பொதுமக்களும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் முரண்பட்டதையடுத்து அவர்



அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் வவுனியா ஊடக அமையம் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளது.



# கொழும்பு துறைமுக நகரின் பெயரை மாற்ற அரசு திட்டம்

சீன முதலீட்டு திட்டமான கொழும்பு துறைமுக நகரை கொழும்பு நிதி நகரமாக பெயர் மாற்றம் செய்து துபாய் மற்றும் அபுதாபி முதலீட்டாளர்களுக்காக மீள உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்த அரசாங்கம் தயாராகி வருகின்றது.

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் தலைமையில் இன்று கொழும்பு நிதி நகரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொழும்பு காலி முகத்திடலை அண்மித்து கடலை நிரப்பி உருவாக்கப்பட்ட 269.3 ஹெக்டேர் பரப்பு, கொழும்பு துறைமுக நகரம் என பெயரிடப்பட்டது.

இந்த பகுதியை பராமரிப்பதற்காக 2021 மே மாதம் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு எனும் பெயரில் தனியான நிர்வாகக் கட்டமைப்பானது உருவாக்கப்பட்டது.




# வைத்தியர்கள் போராட்டம்

## பருத்தித்துறை, சாவகச்சேரி வைத்தியசாலைகளில்

சுகாதாரத்துறையில் நிலவி வரும் நெருக்கடிகளுக்கு உரிய தீர்வை அரசு காண வேண்டும் என வலியுறுத்தி பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, இன்றுநண்பகல்12மணி முதல் பிற்பகல் 1 மணி வரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சுகாதாரத்துறை எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை உள்ளடக்கி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் எட்டு அம்சக் கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பிய போதிலும் அதனை அரசு நிராகரித்துள்ளது.

அதனை நிறைவேற்ற வலியுறுத்தியும், சுகாதாரத்துறையில் நிலவிவரும் நெருக்கடிகள், மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசு உரிய தீர்வைக் காண வலியுறுத்தியும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## ஆமைகளின் உயிரிழப்பிற்கு காரணமாக அமைந்த

# கடலுக்குள் ஏற்பட்ட வெடிப்புகள் தொடர்பில் ஆராயும்படி உரிய தரப்புகளுக்கு அறிவுறுத்தல்



ஆமைகளின் உயிரிழப்பிற்கு காரணமாக அமைந்த – கடலுக்குள் ஏற்பட்ட வெடிப்புகள் தொடர்பில் – ஆராயுமாறு விடயத்திற்குப் பொறுப்பான தரப்பினருக்கு அறிவிக்தப்பட்டுள்ளது என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாரா நிறுவனம், கடற்றொழில் திணைக்களம், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இலங்கை கடற்படையினருக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கிய ஆமைகளின் உடல்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், அவற்றில் பெரும்பாலானவை கடலில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாகவே உயிரிழந்துள்ளன என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையான டைனமைட் எனப்படும் வெடிமருந்துகளை பயன்படுத்தியதன் காரணமாக கடலில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், நாட்டின் மேற்கு கடற்பரப்பில் இவ்வாறான மீன்பிடி முறைகளின் பயன்பாடு குறைவாகவே காணப்படுகிறது என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வெடிப்புகள் தொடர்பான நிச்சயமான தகவல்களை வெளிப்படுத்துவதன் மூலம் ஆமைகள் மட்டுமன்றி ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது முக்கியமானது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் ஒரு மாத காலப்பகுதிக்குள், நாட்டின் மேற்கு, தெற்கு மற்றும் வடமேற்கு கடற்கரைகளில் சுமார் 40 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கின.

யாழ்.நெடுந்தீவு கடற்கரையிலும் உயிரிழந்த 2 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கியிருந்தன என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நல்லூர் கந்தனை வழிபாட்டார் தென்னிந்திய நடிகை ஆண்ட்ரியா

தென்னிந்திய திரைப்பட நடிகை ஆண்ட்ரியா ஜெரேமையா படப்பிடிப்பு ஒன்றிற்காக இலங்கை வந்துள்ளார்.

இருவர் அடங்கிய குழுவினர் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி ஆலயத்திற்கு விஜயம் செய்து பூஜை வழிபாட்டிலும் கலந்துகொண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நடிகை ஆண்ட்ரியா தனது சமூக வலைத்தள பக்கத்தில் யாழ். மாவட்டத்திற்கு சென்றமை பற்றிப் பதிவிட்டுள்ளார்.

அத்துடன் , நல்லூர் கந்தன் ஆலயத்தில் எடுத்த புகைப்படங்களையும் அவர் பதிவேற்றியுள்ளார்.



# கனடாவிலுள்ள தமது பிரஜைகளுக்கு இந்தியா கடும் எச்சரிக்கை விடுத்தது!



கனடாவில் உள்ள தமது பிரஜைகளை இந்தியத் தூதரகங்களில் பதிவு செய்யுமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் போது அதிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என இந்தியாவிலுள்ள தமது பிரஜைகளுக்கு கனடா பயண ஆலோசனையை வெளியிட்டிருந்தது.

இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட சில மணி நேரங்களுக்கு பின்னர், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கனடாவில் உள்ள இந்திய சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக, கனடாவிலுள்ள தமது தூதரகத்துடன் தொடர்ந்தும் தொடர்பினை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கனடாவின், பிரிட்டிஷ் கொலம்பியாவில், கடந்த ஜூன் மாதம் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய தூதரக அதிகாரிகள் தொடர்புபட்டுள்ளனர் என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்நிலையில், ஒட்டாவாவில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் உள்ள தூதரக அதிகாரி பவன் குமார் ராயை, வெளியேற்றுகிறோம் என அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி அறிவித்தார்.

அதற்குப் பதிலளித்த இந்திய வெளியுறவு அமைச்சு, தமது நாட்டிலுள்ள கனேடிய தூதரக அதிகாரி ஒருவருக்கு ஐந்து நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டது.

இந்த நிலையில், கனடா மற்றும் இந்தியாவுக்கு இடையிலான இராஜதந்திர உறவில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கனடாவிலுள்ள இந்தியர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஒட்டாவாவில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் அல்லது டொராண்டோ மற்றும் வான்கூவரில் உள்ள இந்தியத் தூதரகங்களில் பதிவு செய்ய வேண்டும் என அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம் மக்களவையில் நிறைவேறியது!



புதிய நாடாளுமன்றத்தின் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட முதல் சட்டமூலமான மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்பில் 456 உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 454 உறுப்பினர்களும், எதிராக 2 உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர்.

சட்டப்பேரவைகளிலும், நாடாளுமன்றத்திலும் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வழி வகுக்கும் மகளிர் சக்தி இடஒதுக்கீடு சட்டமூலம் தொடர்பாக மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி, இதர பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு இடஒதுக்கீடு இல்லாமல் இந்த சட்டமூலம் முழுமை அடையாது.

பட்டியலின, பழங்குடியின மற்றும் ஓ.பி.சி. பெண்களுக்கான இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையில், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த விவாதத்தில் பங்கேற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம் விரைவில் சட்டமாக்கப்பட்டு, எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தலில் அமல்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தி.மு.க. மக்களவை எம்.பி கனிமொழி பேசும்போது, இந்த சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இது எப்போது அமலுக்கு வரும் என்பது இன்னும் தெரியவில்லை. இந்த சட்டமூலத்தை 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டு பா.ஜ.க. கொண்டு வந்துள்ளது என்று தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி பேசும்போது, இந்த சட்டமூலம் நிறைவேறுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஆட்சிக் காலத்தில் இந்த சட்டமூலம் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

அவ்வாறு நிறைவேற்றப்பட்டு 13 ஆண்டுகளாக இந்திய பெண்கள் காத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் காத்திருப்பது?

இந்திய பெண்களை இவ்வாறு காத்திருக்க வைப்பது சரியா? இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# பெருவில் 544 மாவட்டங்களில் அவசரகால நிலை பிரகடனம்!





பெருவில் நேற்று முன்தினம் முதல் 2 மாத காலத்திற்கு 544 மாவட்டங்களுக்கு அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

எல் நினோ நிகழ்வினால் அங்கு பெரும் வறட்சியும் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படவிருக்கிறது என விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நிலைமையை சமாளிக்க அந்நாட்டின் மத்திய, மாநில மற்றும் உள்ளூர் அரசாங்க அமைப்புகளும் தேசிய சிவில் பாதுகாப்பு நிறுவனமும் ஒருங்கிணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

இந்த நிலையில், அமெரிக்காவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பின் பொது சபையின் சந்திப்பில் பேசிய பெரு நாட்டு ஜனாதிபதி டினா பொலுவார்டே எல் நினோ நிகழ்வை எதிர்கொள்ள பன்னாட்டு கூட்டு முயற்சியும் ஒப்பந்தமும் அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

மத்திய மற்றும் கிழக்கு பசுபிக் கடலின் மேற்புரத்தில் ஏற்படும் அதிகப்படியான வெப்பமயமாதலால் உலகின் பல நாடுகளில் பருவகால மாற்றங்களில், சில வருட கால இடைவெளிகளில் ஒரு சமச்சீரற்ற நிலை உருவாகிறது.

இதன் காரணமாக அதிக வறட்சி, அதிக மழைப்பொழிவு என வானியல் சூழ்நிலை மாறி மாறி நிகழ்கிறது. இதன் காரணமாக குடிநீர் தட்டுப்பாடும், வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்களும் அதிகம் உருவாகின்றன. இந்த நிகழ்வை 'எல் நினோ' என சுற்றுச்சூழலியலாளர்கள் அழைக்கின்றனர்.

# ஜப்பான் அணுமின் நிலைய கழிவு நீரால் வீழ்ச்சியடைந்த கடலுணவு இறக்குமதி!



டோக்கியோ ஃபுகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்றும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜப்பானிடமிருந்து சீனாவுக்கு இறக்குமதி செய்யப்படும் கடல் உணவு கடந்த மாதம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓகஸ்ட் மாதம் ஜப்பானிய கடல் உணவுகளின் இறக்குமதி 67.6 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என சீனா அறிவித்துள்ளது.

தங்களது நாட்டின் கடல் உணவுகளை உலகிலேயே அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக சீனா திகழ்கிறது என ஜப்பானின் விவசாயம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, சீனா 84.4 பில்லியன் யென் பெறுமதியான கடல் உணவை அதன் அண்டை நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது.

ஜப்பான் கழிவு நீரை வெளியேற்ற ஆரம்பித்துள்ளதால், சீனா தமது இறக்குமதியை கட்டுப்படுத்தியுள்ளது.

# வலி நிவாரணியை உட்கொண்ட சிறுவன் பலி!

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வலி நிவாரணியை உட்கொண்ட சிறுவன் உயிரிழந்துள்ளார்.

நியூயோர்க் நகரில் உள்ள சிறுவர் பாடசாலை மற்றும் பராமரிப்பு நிலையம் ஒன்றில் இருந்து பெண்டானில் எனப்படுகின்ற 1 கிரோகிராம் வலி நிவாரணி மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

பெண்டானில் எனப்படும் குறித்த வலி நிவாரணி புற்றுநோயாளிகள் மற்றும் வலிமிகுந்த அறுவை சிகிச்சை நடவடிக்கைகளில் இருந்து மீண்டு வருபவர்களுக்கு வழங்கப்படும் ஒரு வகை சக்திவாய்ந்த செயற்கை பைபெ ரிடைன் ஓபியாய்டு மருந்து ஆகும். இந்த மாத்திரைகள் உட்கொண்டமையால், சிறுவர் பாடசாலையில் இரண்டு வயதான சிறுவன் உயிரிழந்துள்ளார். மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் அளவுக்கதிகமான ஃபெண்டானில் மாத்திரைகளை உட்கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சகலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்

## அது மிகவும் மோசமானது என்கிறார் செந்திவேல்

– எஸ்.நிதர்ஷன்–

“நடைமுறையில் இருக்கிற பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட புதிதாகக் கொண்டு வரப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிகவும் மோசமானது. இந்தச் சட்டம் அனைவருக்கும் பாதிப்பையே ஏற்படுத்தும்.”

– இவ்வாறு புதிய மார்க்சிய லெனின் கட்சியின் பொதுச்செயலாளர் சி.க.செந்திவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இந்த அரசு பொதுமக்களை மேலும் மேலும் அடக்குமுறைக்கு உட்படுத்தும் வகையிலான செயற்பாடுகளையே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிதாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என அறிவித்து புதிய சட்டமொன்றைக் கொண்டு வருகின்றனர்.


உண்மையில் இந்த இரண்டு சட்டங்களையும் பார்க்கையில் இப்போது கொண்டு வரப்படுகின்ற சட்டம் மிகவும் ஆபத்தானது.

இந்தப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில சரத்துக்கள் அனைவரையுமே மிக மோசமாகப் பாதிப்பதாகவே உள்ளது.

அதிலும் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொள்கின்றபோது அது பயங்கரவாதமாகக் கருதப்படும் பட்சத்தில் அவர்கள் கைது செய்யப்படுகின்ற ஆபத்து உள்ளது.

இந்த அரசின் புதிய சட்டமூலத்தில் அரசுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் மட்டுமல்ல குறிப்பாக ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்களை அடக்குவதற்குக் கூட புதிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வந்திருக்கின்றது.

இதனால் இனிவரும் காலங்களில் அரசுக்கு எதிராக யாரும் கை தூக்க முடியாத நிலை – பேனாவை எடுத்துக் கொள்ள முடியாத நிலை தோற்றுவிக்கப்படும் ஆபத்து உள்ளது.” – என்றார்.



# மசகு எண்ணெயின் விலை தொடர்ந்து சர்வதேச சந்தையில் கிடுகிடு உயர்வு!

## இலங்கையிலும் எரிபொருள் விலை அதிகரிக்கும் சாத்தியம்

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்து உயர்வடைந்து வருகிறது.

இதன்படி, ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 95 அமெரிக்க டொலராக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய விலை அதிகரிப்பாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சவூதி அரேபியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் உற்பத்தி சரிவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் சந்தையில் மசகு எண்ணெய் விலை இவ்வாறு அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சர்வதேச ரீதியில் பொது மக்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை இந்த வாரம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் எண்ணெய் விலை அதிகரித்துள்ள நிலையில், பணவீக்கமும் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கும் மத்திய வங்கிகளுக்கு மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், வட்டி வீதத்தை மேலும் அதிகரிப்பதற்கான அழுத்தத்தையும் அதிகரிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில் எதிர்வரும் நாள்களில் இலங்கையிலும் எரிபொருள் விலை அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

இவ்வாறு எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் பட்சத்தில் அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட அனைத்து பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் அதிகரிக்கும்.

# வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்களின் வீதம் அதிகரிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக இலங்கையிலிருந்து வெளியேறுபவர்களில் ஆண்களின் வீதம் தொடர்ந்து அதிகரித்திருந்தது.

இந்த நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் மீண்டும் நாட்டை விட்டு வெளியேறும் பெண்களின் வீதமும் அதிகரித்துள்ளது என்று ஆய்வுகளின் ஊடாகத் தெரியவந்துள்ளது.

2000 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பின் நிமித்தம் சவூதி, கட்டார் போன்ற மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுக்கு சென்றவர்களில் 67 வீதமானோர் பெண்களாகவும் 33 வீதமானோர் ஆண்களாகவும் காணப்பட்டுள்ளனர்.

2008 ஆம் ஆண்டு வரையில் வெளியேறுபவர்களில் அதிகளவானோர் பெண்களாக காணப்படுவதை தரவுகள் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன. 2008 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டை விட்டு வெளியேறுபவர்களில் அதிகளவானோர் ஆண்கள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து வேலைவாய்ப்பிற்காக நாட்டை விட்டு வெளியேறியோரில் ஆண்களின் வீதம் ஒருசில வருடங்களில் கூடிக் குறைந்தாலும் ஒட்டுமொத்த கணக்கெடுப்பின் அடிப்படையில் பெண்களை விட அதிக வீதத்தையே வெளிப்படுத்துகின்றது.

எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டில் நாட்டை விட்டு வெளியேறும் பெண்களின் வீதம் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதன் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் வேலை நிமித்தம் நாட்டை விட்டு வெளியேறியவர்களில் 40 வீதமானோர் பெண்கள் என பதிவாகியுள்ளது.

இவர்களில் 60 வீதமானோர் வீட்டு பராமரிப்பு உதவியாளர்களாவும் 30 வீதமானோர் குறைந்தளவு மூளையை பயன்படுத்த கூடிய தொழில்களுக்காகவும், 1.08 வீதமானோர் நடுத்தர தொழில்களுக்காகவும் வெளியேறி உள்ளனர் எனவும் 1.18 வீதமானோர் சிறந்த தொழில் தகைமை கொண்டவர்கள் எனவும் 5.5 வீதமானோர் நிபுணத்துவம் பெற்றவர்கள் எனவும் 2 வீதமானோர் அலுவலக பணிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நாட்டை விட்டு வெளியேறிய ஆண்களின் வீதம் 2021 ஆம் ஆண்டில் 67 வீதமாக இருந்தது. இந்த நிலையில் 2022 ஆம் ஆண்டில் 60 வீதம் ஆக இது பதிவாகியுள்ளது.

# ஐந்து மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக, நாட்டின் பல பகுதிகளுக்கு முதல் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கைகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அதன் சிரேஷ்ட அதிகாரி வசந்த சேனாதீர குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பெய்த கடும் மழையுடன், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் செவ்வாய் இரவு 10.30 மணியளவில் மண்சரிவு அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதன்படி, காலி மாவட்டத்தின் எல்பிட்டிய மற்றும் நாகொடை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தின் தொடங்கொடை, அகலவத்தை, மத்துகம, வல்லாவிட்ட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட, புலத்கொஹுபிட்டிய, யட்டியந்தோட்டை மற்றும் தெரணியகலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட மற்றும் பிடபெத்தர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தில் எஹெலியகொட பிரதேச செயலகப் பிரிவுக்கும் முதல் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மழையுடனான வானிலை மாற்றத்தின் கீழ் இந்த அறிவிப்பில் மாற்றம் ஏற்படக்கூடும் எனவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், அறிவுறுத்தியுள்ளது.



### அரசினால் பலவந்தமாகப் பிடுங்கப்பட்ட

# மட்டக்களப்பு கம்பஸ் திரும்பவும் ஹிஸ்புல்லாஹ்விடம் கையளிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் ஜெயந்தியாய வில் அமைந்துள்ள 'பட்டிகாலோ கம்பஸ்' நேற்றுப் புதன்கிழமை இராணுவத்திட மிருந்து விடுவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பல வருடங்களாக இராணுவத்தின ரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த பல்கலைக்கழகத்திலிருந்து இராணு வத்தினர் நேற்று வெளியேறியுள் ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்விடம் கம்பஸை பொறுப் பேற்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நேற்று நேரடியாக கம்பஸுக்கு விஜயம் செய்து அதனைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கெம்பஸை பொறுப்பேக்கும் நிகழ் வில் கல்குடா அல் கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம்.ஹாரூன் ஸஹ்வி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம். தாஹீர், மௌலவி மும்தாஸ் மதனி உட்பட பலரும் கலந்து கொண்ட னர்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை அடுத்து எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்விடம் இருந்து இந்தக் கம்பஸை இராணுவம் மூலம் அப்போதைய அரசு பலவந்தமா கப் பிடுங்கிக் கொண்டது என்பது தெரிந்ததே.

# சிறுமியின் மீது துஷ்பிரயோகம் திருமணமான இளைஞர் கைது

பதினாறு வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் 26 வயதுடைய திருமண மான ஒருவர் பியகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதி தனது தாயுடன் பியகம பெரக சந்திய பிரதேசத்தில் உள்ள விடுதி அறையில் தற்காலிகமாக தங்கி யிருந்த நிலையில், திருமணமான இந்த இளைஞர். இந்தச் சிறுமியுடன் உறவைப் பேணினார் எனத் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் சிறுமி விடுதியில் இருக்கும்போது அவர் மீது இந்தக் குற்றத்தைச் செய்துள்ளமை விசாரணை களில் தெரிய வந்துள்ளது. இவர்கள் இருவரும் ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயில்வே திணைக்களத்தின் மறுசீரமைப்பு: இடைக்கால அறிக்கை அமைச்சரவைக்கு

ரயில்வேத் திணைக்களத்தின் மறுசீரமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை அடுத்த மாத முற்பகுதியில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளது என அதற்காக நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

இந்தக் குழு மீண்டும் விரைவில் கூடவுள்ளது என அதன் தலைவரும் துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருமான கே.டி. எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்களத்தின் செயற் பாட்டு நட்டத்தை ஈடுசெய்து சிறந்த சேவையை வழங்குவதற்கான முன் மொழிவுகளை இந்தக்கு ழு பரிசீலிக்க வுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலரும் இந்தக் குழுவில் அங்கம் வகிக் கின்றனர் என ருவன்சந்திர தெரிவித் துள்ளார்.

யோசனை தயாரிக்கப்படுகின்ற சந் தர்ப்பத்தில் பல்கலைக்கழக விரிவுரையா ளர்களின் கருத்துகள் உள்வாங்கப்பட வுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# திலீபனின் ஊர்திக்கு வவுனியாவில் உணர்வு பூர்வமாக நேற்று அஞ்சலி










தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்த்திப் பவனி வவுனியாவில் இடம்பெற்றது. உணர்வெழுச்சியுடன் மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தலை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் ஏற்பாட்டில் “திலீபன் வழியில் வருகின்றோம்” என்னும் ஊர்திப் பவனி அம்பாறை பொத்துவிலில் ஆரம்பித்து 6 ஆவது நாளான நேற்று வவுனியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றிருந்தது.

இதன்போது, காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள், வெளிநாட்டு பிரஜைகள், வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் ஊர்தியை வரவேற்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் வவுனியாவின் நெடுங்கேணி, புளியங்குளம், ஓமந்தை, வவுனியா நகரம், குருமன்காடு, தாண்டிக்குளம், பம்மைமடு, வைரவபுளியங்குளம், திருநாவற்குளம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் ஊர்தி சென்றது. அங்கும் பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் உணர்வெழுச்சியுடன் தியாக தீபத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.






# குச்சவெளியில் ஒருவர் யானை தாக்கி மரணம்

திருகோணமலை – குச்சவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லம்பத்துவ வனப்பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திரியாய பகுதியை சேர்ந்த 56 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கல்லம்பத்துவ வனப்பகுதிக்கு விறகு சேகரிக்கச்சென்றிருந்த போது அவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# இலங்கை கடவுச்சீட்டுடன் நாட்டுக்குள் நுழைய முயற்சித்த மலேஷியப் பிரஜை!

இலங்கை கடவுச்சீட்டுடன் நாட்டுக்குள் நுழைய முயன்ற மலேஷியர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு அவர் வந்த அதே விமானத்தில் மீண்டும் தோஹாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 33 வயதான மலேஷியரே இவ்வாறு கைதாகி நாடு கடத்தப்பட்டார்..

அபுதாபியில் வைத்து இந்த மலேஷியப் பிரஜை, இலங்கை கடவுச்சீட்டு ஒன்றை இலங்கை இளைஞர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பிரதான குடிவரவு அதிகாரிகளான டி.ஜே.வீரசிங்க மற்றும் எச்.எம்.டபிள்யூ. உதயகுமார ஆகியோரின் ஆலோசனையின் பேரில் குடிவரவு, குடியகல்வு அதிகாரி ஈ.ஏ.விஜேநாயக்கவினால் இந்த கைது மற்றும் நாடு கடத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



# பெல்ஜியத்திலிருந்து இறக்குமதியான கொள்கலனில் போதைப்பொருள் மீட்பு

பெல்ஜியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனொன்றில் இருந்து ஒரு கோடியே 64 லட்சம் ரூபா பெறுமதியான ஹஷிஸ் போதைப்பொருள் அடங்கிய பொதியொன்று சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஒருகொடவத்தையிலுள்ள கொள்கலன் முனையமொன்றில் வைத்து இந்தப் போதைப்பொருள் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் – வென்னப்புவ பகுதியிலுள்ள முகவரியொன்றுக்கு அனுப்பப்பட்டிருந்த இந்த பொதியில் 01 கிலோ 98 கிராம் ஹஷிஸ் போதைப் பொருள் காணப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பொதியில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரி போலியானது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலீ அருக்கொட குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஹஷிஸ் போதைப் பொருள், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



# கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் பற்றாக்குறையினால் சேவை பாதிப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று முதல் பெட் ஸ்கேன் பரிசோதனையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கதிரியக்க அதிகாரிகளின் பற்றாக் குறையே இதற்கான காரணம் என சங்கத்தின் தலைவர் சானக தர்ம கீர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஜீ.விஜேசூரிய கருத்து தெரிவிக்கையில், சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கமைய பயிற்சிகளை நிறைவு செய்த கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களை ஈடுபடுத்தி இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# யாழ் பல்கலையில் நேற்று அஞ்சலி



யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபனின் உண்ணா விரத அறப்போராட்டத்தின் 6 ஆம் நாள் நினைவேந்தல் நேற்றுப் பல் கலைக்கழக பிரதான வளாக பொதுத் தூபியில் மாணவர்களால் உணர் வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாண வர்கள், பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், கல்விசாரா ஆளணியினர், ஊடகவியலாளர் எனப் பலரும் பங் கேற்றிருந்தனர்.



# ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான 28 வாகனங்களுக்கு காப்புறுதி இல்லையாம்

ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான 28 வாகனங்கள் காப்புறுதி செய்யப்படவில்லை என அண்மைய கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தி யுள்ளது.

அந்த வாகனங்களில் 13 வாகனங் கள் அதியுயர் பாதுகாப்பு வாகனங்கள் எனவும், ஒரு வாகனத்தின் பெறுமதி 25 முதல் 30 கோடி ரூபா எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தணிக்கை அறிக்கையின்படி, தொடர்புடைய உயர் காப்பீட்டு வாக னங்களின் அதிக மதிப்புக் காரணமாக, காப்பீட்டுக்காக ஒவ்வொரு வாகனத் துக்கும் ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபா செலுத்த வேண்டும்.

அதிக தொகை என்பதால் காப்புறுதி செய்யப்படவில்லை என ஜனாதிபதி செயலக கணக்கு அதிகாரி கணக்காய் வாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் பின்பற்றப்படாவிடின் அந்தத் தேவை களைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றுக் கொள்கை முடிவுகளை அறி முகப்படுத்த வேண்டும் எனவும், ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை என வும் அந்த அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி மன்றங்களில் வெளிவாரியாகக் கடமையாற்றும் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை

உள்ளூராட்சி மன்றங்களில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சுகா தாரத் தொழிலாளர்களாகவும், வேலை வெளிக்களத் தொழிலாளர்களாகவும் 180 நாள்களைக் கடந்து தொடர்ச்சியாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப் பட்டுள்ள நிலையில், வடக்கு மாகா ணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர் சேவையில் ஈடுபட்டு வரும் 406 வெளிவாரிப் பணியாளர்கள் இந் நியமனத்திற்குள் உள்ளீர்க்கப் படாதமையால் மிகமோசமான பாதிப்பு களைஎதிர்கொண்டுள்ளனர்எனநாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.



இவ்விடயமாக வடக்கு மாகாணத் தின் ஐந்து மாவட்டங்களிலும் அவரால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படை யில் தயாரிக்கப்பட்ட 406 வெளி வாரித் தொழிலாளர்களது விவரப்பட்டி யல் உள்ளடங்கலாக ஜனாதிபதி, பிரத மர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களிலேயே மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கடிதங்களில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:-

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைப் பரப்பினுள் அடங்கும் திண்ம, திரவக் கழிவகற்றல், பொதுச் சந்தைகள் மற்றும் குத்தகை நிலையங்களின் மேற்பார்வை, வரி அறவீடு, காவற் கடமை உள்ளிட்ட இடர்மிகு பணிகளை ஏராளமான சமூகச் சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் செவ்வனே நிறைவேற்றி வந்த இத்தொழிலாளர்கள், என்றோ ஒரு நாள் தமக்கான நிரந்-தர நியமனம் வழங்கப்படும் என்ற நம் பிக்கையின் அடிப்படையிலேயே நீண்டகாலம் தொடர்ச்சியாகக் கடமை யாற்றி வருகின்றனர்.

ஆளணி முகாமைத்துவத்தை இலகுபடுத்தும் நோக்கில் வடக்கு மாகாணசபையில் நடைமுறையி லுள்ள தீர்மானத்தின் அடிப்படையில், குறித்த ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் நிர்வாக எல்லைக்குள் இயங்குகின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட சமூகமட்ட நிறுவனங்களும் உள்ளூ ராட்சி மன்றங்களும் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே மேற்குறித்த 406 வெளிவாரித் தொழிலா ளர்களும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒப்பந்தப் பணியாளர்களாக இணைத் துக் கொள்ளப்பட்டனர். இவர்களுக் கான தினவரவுப் பதிவு, மாத வேதனம், விடுமுறை உள்ளிட்ட சலுகைகள், உரிமைகள் அனைத்தும் அந்தந்த உள்ளூராட்சி மன்றத்தினாலேயே நிர் வகிக்கப்படுகின்ற போதும், வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றும் இவ் ஊழியர்களை நிரந்தர நியமனத்தில் உள்ளீர்ப்பதில் நிருவாக இடர்பாடுகள் இருப்பதாகக்கூறி அவர்களது நிரந்தர நியமனம் நிராகரிக்கப்பட்டுள்ளமை, உள்ளூராட்சி மன்றங்களை முழுமை யாக நம்பியிருந்த அத்தொழிலாளர் களையும் அவர்களது குடும்பங்களை யும் வாழ்வாதார ரீதியான பிடிமா னங்களற்று அந்தரிக்கும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

எனவே, இதுவிடயமாக தாங்கள் உயரிய கரிசனை கொண்டு உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு நிய மனம் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ், வெளிவாரி அடிப்படையிலான ஒப்பந்தப் பணியாளர்களாக வடக்கு மாகாணத் தில் கடமையாற்றும் 406 தொழிலாளர் களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க ஆவனசெய்வதன் மூலம், அவர்களுக் கும் அவர்களது குடும்பங்களுக்கும் வாழ்வளிக்க முன்வர வேண்டுமென்று தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின் றேன். - என்றுள்ளது.



# வங்கி ஏ.ரி.எம். இயந்திரத்தை உடைத்து நிட்டம்புவையில் ரூ.76 லட்சம் அபேஸ்!

நிட்டம்புவ நகரிலுள்ள தனியார் வங்கிஒன்றின்ஏ.ரி.எம்.இயந்திரம்உடைக் கப்பட்டு அதிலிருந்த சுமார் 76 லட்சம் ரூபா பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் நிட்டம்புவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர்.

கடந்த 16ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை வங்கிப் பணிகள் ஆரம்பமாகியமையை யடுத்து, இயந்திரத்தில் இடப்பட்டிருந்த பணத்துக்கு த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள தாக வங்கி அதிகாரிகளுக்கு தெரிய வந்ததது. அதையடுத்தே பணம் திருடப்பட்டுள்ளமை கண்டறியப் பட்டது.

இது தொடர்பில் விரிவான விசார ணைகளை ஆரம்பித்துள்ள நிட்டம்புவ பொலிஸார், வங்கியின் பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் உட்பட பல அதிகாரி களிடம் வாக்குமூலங்களைப் பெற நட வடிக்கை எடுத்துள்ளனர்.



# வாழைச்சேனையில் சதுரங்கப்போட்டி: புரோ நெயிட்ஸ் செஸ் அக்கடமி சிறப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வாழைச்சேனையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் புரோ நெயிட்ஸ் செஸ் அக்கடமி மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சதுரங்கப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றது.

இதில் புரோ நெயிட்ஸ் செஸ் அக் கடமி சார்பாகப் பங்கேற்று, 15 வயதுக் குட்பட்ட பிரிவில் ஏ.அர்ஹம் பர்விஸ் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

திறந்த பிரிவில் புரோ நெயிட்ஸ் அக்கடமியைச் சேர்ந்த மூன்று மாண வர்கள் பங்குபற்றினர். அதில் பயிற்று விப்பாளர் எஸ்.எல்.எம்.சுஹ்தான் இரண் டாம் இடத்தையும் எம்.இஸட்.எம்.ஸ ானிப் மூன்றாம் இடத்தையும், ஏ.எஸ். ஏ.மிஜ்வாத் சிறப்புப் பரிசினையும் பெற்றனர்.



# தேசிய ரீதியில் சாதித்த மன்னார் மாணவி



- மன்னார் நிருபர் -

கொழும்பில் நடைபெற்ற பாட சாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட ரைகொண்டோ போட்டியில் இரண்டாம் இடம் பிடித்து மடு கல்வி வலய மாணவி லக்சாயினி சாதித்துள்ளளார் .

கொழும்பில் பாடசாலைகளுக் கான தேசிய மட்டப் போட்டிகள் நடை பெற்று வருகின்றது.

இந்நிலையில், ரைகொண்டோ போட்டியில் முதன் முதலாக மன்னார் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட மன்/ பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தி யாலய மாணவி லக்சாயினி பங்கேற்றார்.

இவர் இப்போட்டியில் பங்கேற்று இரண்டாமிடத்தைப் பிடித்து சாதித் துள்ளார்.

தமது பாடசாலையின் விளையாட்டு வரலாற்றில் நீண்ட காலத்தின் பின்னர் இவரே தேசிய மட்டத்தில் 2ஆம் இடத் தைப் பெற்றுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 21.09.2023




இன்று மன திடத்துடன் இருக்க வேண்டியது அவசியம். உங்கள் பணிகளை கையாளும்போது சில தடைகள் ஏற்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். நேர்மறையான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உறவில் மகிழ்ச்சி நிலவ நீங்கள் மனம் திறந்து பேச வேண்டும். அனுசரித்து செல்வது நல்லது.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினை காரணமாக அசௌகரியமாக உணர்வீர்கள். முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்றைய நாள் சீராக இருக்கும். நண்பர்களும் உடனிருப்பவர்களும் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

பணியிடத்தில் சில இனிமையான ஆச்சரியங்களை சந்திப்பீர்கள். எனவே உங்கள் பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக தீர்க்கலாம். இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். அதை நல்ல முறையில் பயன்படுத்துவீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின முயற்சிகளின் மூலம் வெற்றி காண்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் நேர்மை மற்றும் உறுதி காரணமாக உங்கள் பணிக்கு நல்ல மதிப்பு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவரும் பயனுள்ள ஆலோசனைகளை நடத்துவீர்கள்.

கடன்கள் மூலம் பண வரவு காணப்படும். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று மகிழ்ச்சியான ஆரோக்கியமான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும். உங்கள் செயல்களை மேற்கொள்ளும்போது சில சவால்களை சந்திக்க நேரும். இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை.

குடும்பதில் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் இருவருக்கும் இடையிலான உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

வீட்டிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவுகளை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். அவருக்கு வயிறு சம்பந்தமான உபாதை காணப்படும்.




இன்று பயணம் அதிகமாக காணப்படும். பலன்கள் தாமதமாக கிடைக்கும். எனவே திட்டமிட்டு செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல் காணப்படும். உரையாடும்போது உங்கள் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை வேண்டும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். அதனைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. முறையாக உடற்பயிற்சி செய்வது நல்லது.




இன்று வெற்றி எளிதாக கிடைக்கும். உங்களுடைய இனிமையான சுபாவம் பிறரிடம் உங்கள் மீதான நல்லெண்ணத்தை வளர்க்கும். நீங்கள் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் சவால்களை எளிதாகக் கையாள்வீர்கள். அனுசரித்து போகும் அணுகுமுறை உங்களை உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

காதல் ஜோடிகளிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவின் நல்லிணக்கம் மேம்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் மனஉறுதி காரணமாக இன்று இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். எனவே அவற்றை மேற்கொள்ளும் விதத்தில் உங்கள் செயல்களை திட்டமிதல் சிறந்தது. உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

வேலை விஷயமாக பயணம் செல்ல நேரும். ஆனால் அது திருப்தியை அளிக்காது. பயணத்தை தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

கட்டுப்பாடான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சிப் பூர்வமான விஷயங்களை கவனமாக கலந்தாலோசிக்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே புத்துணர்ச்சி அளிக்கும் எந்த விஷயத்திலாவது ஈடுபடுங்கள்.




பயணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும். இசையைக் கேட்பது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியில் கவனம் குறைவாக காணப்படும். பணிகளை திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

தம்பதியரிடையே அன்பு குறைந்து காணப்படும். இது உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

பண வரவு செலவு இரண்டும் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

கவலைகளின் காரணமாக தூக்கமின்மை ஏற்படும். யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் -21.09.2023




மற்றவர்களுடன் சிறிது எச்சரிக் கையுடன் அணுக வேண்டும். உங்க ளுக்கு பிரியமானவர்களுடன் பேசும் போது கவனம் தேவை. இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் சிறந்த பலனை அளிக்காது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படலாம்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். கவனமாக இல்லாவிடில் பண நஷ்டம் ஏற்படும்.

சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று பயணங்கள் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மிகுந்த ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் நல்ல செயல்திறனுடன் செயல்படுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நல்ல புரிந்துணர்வு இருந்தால் தம்பதியரிடையே அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். உங்கள் துணை யைப் பற்றி மகிழ்ச்சியுடன் உணர்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். இன்று உங்கள் எதிர்கால நலன் கருதி முதலீடு செய்யலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள சிறந்த நாள். நீங்கள் எடுக்கும் சிறிய முயற்சிகள் கூட உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும். நண்பர்கள் மற்றும் உட னிருப்பவர்களின் நல்லாதரவு கிடைக் கும்.

புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். கிடைக்கும் நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்கையில் ஒருமுறை வரும் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை நேர்மையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.




உங்கள் திறனை அடைவதற்கு குறைந்தவாய்ப்புகாணப்படும்.அனைத்து செயல்களையும் திட்டமிட்டு செய்யவும். யதார்த்தமான அணுகுமுறை மேற் கொள்ளவும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப் புள்ளதால் பணிகளைக் கவனமாக கையாளவும். நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அமைதி யைப் பராமரிப்பது நல்லது

பண வரவு காணப்பட்டாலும் இன்று செலவும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். அதிர்ஷ்டத்தை இன்று நம்ப வேண்டாம். உங்கள் கடின உழைப்பின் மூலம் பலன் கிடைக்கும்.

சரியான நேரத்தில் உணவு உண்ணுங்கள்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park